செ.வெ.எண்:53/பிப்ரவரி/ 2020 நாள்:20.02.2020

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்களில் அமைந்துள்ள 13 சாதாரண வகை கற்குவாரிகளிலிருந்து சிறுகனிமங்களை குவாரி செய்து எடுத்து செல்வதற்கு சுவர்ண ஜெயந்தி கிராம சுவரோஜ்கார் யோஜனா (SGSY) சங்கங்கள் மற்றும் விடுவிக்கப்பட்ட கொத்தடிமை தொழிலாளர்களால் அமைக்கப்பட்ட சங்கம் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அடிப்படையில் நேரிடையாக ஐந்தாண்டுகளுக்கு கல் குவாரி குத்தகை உரிமம் வழங்குதல் தொடர்பாக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பங்களை தமிழ்நாடு சிறுகனிமச் சலுகை விதிகள் 1959ன் விதி எண் 8 சார்பு விதி 10(அ)-ன்படி அதன் பிற்சேர்க்கை VI பி, படிவத்தில் பூர்த்தி செய்து மூடி முத்திரையிடப்பட்ட உறையில் விண்ணப்பங்கள் 05.03.2020 அன்று மாலை 5.30 மணிக்குள் “உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி” என்ற முகவரிக்கு கிடைக்கப்பெறத் தக்கதாக அனுபப்பட வேண்டும். மேலும் தகவல்களுக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட அரசிதழ் (சிறப்பிதழ்) எண்: 3 நாள்: 20.02.2020 – ஐ பார்க்கவும்.

செய்தி வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.